**செய்தி வெளியீடு எண்:564** **நாள்: 31.08.2017**

# செய்தி வெளியீடு

தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகளில் எம்.பி.பி.எஸ். /பி.டி.எஸ் இடங்களுக்கான மாணவர்கள் சேர்க்கை கலந்தாய்வு வெளிப்படையாகவும், ஒளிவு மறைவின்றியும் சென்னை ஓமந்தூரார் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனையில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு நடைபெற்று வரும் கலந்தாய்வு முடிவுகளைப்பற்றி உண்மைக்கு மாறான சில கருத்துக்கள் சமூக ஊடகங்களில் பரவி வருகின்றன. இது குறித்த உண்மை நிலை பின்வருமாறு:-

மருத்துவக் கலந்தாய்வைப் பொறுத்தவரை, அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள 2445 இடங்கள், சிதம்பரம் ராஜா முத்தைய்யா மருத்துவக் கல்லூரியில் உள்ள 127 இடங்கள் மற்றும் 11 சுயநிதி மருத்துவக் கல்லூரிகளால் அரசுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ள 859 இடங்கள், அகில இந்திய அளவில் கலந்தாய்வுக்குப் பின் மாநில அரசுக்கு திருப்பி ஒப்பளிக்கப்பட்ட 101 இடங்கள் எனமொத்தம் 3532 இடங்களுக்கும், இதேபோன்று 1201 பல் மருத்துவப் படிப்புக்கான இடங்களுக்கும் கலந்தாய்வு, **இடஒதுக்கீடு முறையை பின்பற்றி,** 24.08.2017 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதுவரை, ஒதுக்கீடு செய்யப்பட்ட 4546 எம்.பி.பி.எஸ் / பி.டி.எஸ் இடங்களில், 3112 இடங்கள் மாநில பாடத்திட்டத்தில் படித்த மாணவர்களுக்கும், 1434 இடங்கள் சி.பி.எஸ்.இ மற்றும் இதர பாடத்திட்டங்களில் படித்த மாணவர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மாநில அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கான தகுதியை பொறுத்தவரை, இந்த ஆண்டுக்கான விண்ணப்பப் படிவத் தகவல் தொகுப்பில் (Prospectus) குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளின்படியே கலந்தாய்வு நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், சில சமூக ஊடகங்களில் பிற மாநில மாணவர்களுக்கு தமிழ்நாட்டில் அதிக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்றும் இரட்டை பூர்வீக சான்றிதழ் பெற்றுள்ளவர்களுக்கும் (Dual Nativity Certificate) இடம் கிடைத்துள்ளது என்றும் செய்திகள் பரவி வருகின்றன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கும், தமிழ்நாட்டில் 8–ஆம் வகுப்பிலிருந்து 12–ஆம் வகுப்புவரை படித்த மாணவர்களுக்கும், தமிழகத்தைச் சேர்ந்த இராணுவம், மத்திய அரசுப் பணி மற்றும் இதர பணிகள் காரணமாக பிற மாநிலங்களில் சென்று பணியாற்றிவரும் நிலையில் அவர்கள் தங்களின் குழந்தைகளுக்கு முறையாக பூர்வீகச் சான்றிதழ் (Nativity Certificate) பெற்றிருந்தால், கடந்த பல ஆண்டுகளாக உள்ள அதே நடைமுறையைப் பின்பற்றியே இந்த ஆண்டும் அவர்கள் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

30.8.2017–ஆம் தேதிவரை நடந்த கலந்தாய்வில், தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழகத்தில் படித்த 4090 மாணவர்கள், தமிழ்நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட 428 மாணவர்கள் மற்றும் பிற மாநிலத்தைச் சேர்ந்த ஆனால் தமிழகத்தில் 8-வது முதல் 12-ம் வகுப்பு வரை 5 ஆண்டுகள் கல்வி பயின்ற 28 மாணவர்கள் என மொத்தம் 4546

மாணவர்களுக்கு எம்.பி.பி.எஸ் /பி.டி.எஸ் படிப்பிற்கான இடங்கள் உரிய விதிமுறைகளின்படி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உண்மை நிலை இவ்வாறிருக்க, **1500**–க்கும் மேற்பட்ட பிற மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் மாநில அரசு நடத்திய கலந்தாய்வு மூலமாக மருத்துவபடிப்பிற்கான ஒதுக்கீடு பெற்றுள்ளார்கள் எனக் கூறப்படும் கருத்துகள் முற்றிலும் தவறானவையாகும் .

மாநில அரசு இடங்களுக்கான கலந்தாய்வு **30.8.2017** அன்று முடிவு பெற்றது. **31.8.2017** மற்றும் **1.9.2017** ஆகிய நாட்களில் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டிற்கான இடங்களுக்கு கலந்தாய்வு நடைபெற உள்ளது. அதன் பின்னர் **2.9.2017** மற்றும் **3.9.2017** ஆகிய நாட்களில் அரசு மருத்துவ கல்லூரிகளில் உள்ள இடங்கள், சுயநிதி கல்லூரிகளால்அரசுக்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளின் நிர்வாக ஒதுக்கீட்டிற்கான இடங்கள் ஆகியவற்றிற்கு இரண்டாம் கட்டகலந்தாய்வு நடைபெற உள்ளது.

இதுமட்டுமின்றி, இருப்பிட சான்றிதழ் மற்றும் இதர குறைகள் குறித்து உரிய முறையில் விசாரணை செய்து தீர்ப்பதற்கு கூர்ந்தாய்வுக் குழு (Scrutinising Committee) கலந்தாய்வு அரங்கத்திலேயே ஏற்படுத்தப் பட்டுள்ளது. மாணவர்களால் அளிக்கப்பட்டுள்ள சான்றிதழ்களை சரிபார்த்த பிறகு, கூடுதலாகஅவர்களிடமிருந்து மற்ற மாநிலங்களில் அவர்கள் இருப்பிடச் சான்றிதழ் பெறவில்லை என்றும் அகில இந்திய ஒதுக்கீட்டின் கீழோ, (All India Quota) நிகர் நிலை பல்கலைகழகங்களிலோ (Deemed Universities) அல்லது வேறு எந்த மாநிலத்திலும் (Any other State other than Tamil Nadu) மருத்துவ படிப்பிற்கான ஒதுக்கீடு பெற்று சேரவில்லை என்றும் மற்றும் அவர்கள் கொடுத்துள்ள அனைத்து சான்றிதழ்களும் உண்மையானவை என்றும் உறுதிமொழி (Undertaking) அவர்களிடமிருந்து பெறப்படுகிறது.

மேலும் இந்த ஆண்டிலிருந்து தமிழகத்தைச் சேர்ந்த ஆனால் பிற மாநிலங்களில் படித்த மாணவர்கள் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து வந்து தமிழகத்தில் படித்த மாணவர்கள் ஆகிய இரு பிரிவினரும் கலந்தாய்வின் போது அளித்த பூர்வீகச் சான்றிதழ்கள் (Nativity Certificates) அனைத்தும், அச்சான்றிதழ்கள் வழங்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டு அந்தந்த மாவட்ட ஆட்சிதலைவர்களால் அவற்றின் உண்மைத் தன்மை (Genuineness) மற்றும் தகுதி (Eligibility) ஆகியன சரிபார்க்கப்பட்டும். இரட்டைச் சான்றிதழ்களைத் தடுக்கும் வகையில் இத்தகைய மாணவர்கள் படித்த மாநிலங்களின் மருத்துவத் தேர்வுக் குழுவுக்கு விவரங்கள் அனுப்பிவைக்கப்பட்டு இதே மாணவர் அம்மாநிலத்திலும் அந்த மாநில அரசின் ஒதுக்கீட்டின் கீழ், அந்த மாநிலத்தின் பூர்வீக சான்றிதழின் அடிப்படையில் ஒதுக்கீடு பெற்றுள்ளாரா என்பதும் கண்டறியப்படும். மேற்காணும் நிகழ்வுகள் ஏதேனும் நடந்திருப்பது கண்டறியப்பட்டால் அச்சேர்க்கை இரத்து செய்யப்பட்டு தகுந்த மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**